போய்விட்டன. சர்க்கார் செஸ் விதித்து, பாம்பூ மேலே, வரியை அதிகமாக்கலாம். சாதாரண ஜனங்கள் உபயோகப்படுத்தினால் பரவாயில்லை. பாக்டரிகளுக்கு சப்ளை பண்ணக்கூடிய மரங்களுக்கும், மற்ற தோப்புகளுக்கும் அவர்கள் எடுக்கக் கூடிய மரங்களுக்கு அதிக மாக வரிகளைப் போட்டு, டிபார்ட்டுமென்ட் மூலமாக, காட்டு வளர்ப்புத் திட்டத்தைச் செய்யவேண்டும். ஆகவே, இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பதிலில்லை)

திரு. என். கே. பழனிசாமி அவர்கள் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவுகள், 3, 4 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/75) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(13) அரசினர் தனித் தீர்மானம்

தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்படவிருக்கின்ற வரைவு அறிவிப்பை ஏற்றுக் கொள்வது குறித்து.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, "தமிழ்நாடு, 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்

பிரிவின் (b) பகுதியின்கீழ் வெளியிடப்படவிருக்கிற கீழ்க்காணும் வரைவு அறிவிப்பு, மேற்சொன்ன பிரிவின் (4) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு ஏற்கப்பட வேண்டும்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

வரைவு அறிவிப்பு

தமிழ்நாடு 1966-ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1966) 1-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் b பகுதியின்கீழ் தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசிதழ் 1974-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாளிட்ட சிறப்பு வெளியீட்டைச் சேர்ந்த பகுதி II 2-வது பிரிவின், 1-வது பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறையில் 1974-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாளிட்ட 11 (2)/RUL /523 (n) /74 ஆம் எண் அறிவிப்பில் மதுரை மாநகராட்சியின் அதிகார வரம்பிற்குள் சேர்க்கப்பட்டுள்ளதும், மேற்சொன்ன அட்டவணையின் (2) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களில் உள்ளவையும் கீழே விவர அட்டவணையின் (3) பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில், தமிழ்நாடு அரசிதழில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து மேற்சொன்ன சட்டம் செயலுக்கு வரத் தொடங்குமென இதனால் கட்டளையிடுகிறார்.

விவர அட்டவணை

தொடர் எண்.	வருவாய் கிராமத்தின் எண்ணும் பெயரும்.	நில அளவை எண்.
(1)	(2)	(3)
1	21 விளாங்குடி ..	113 பகுதி, 114 லிருந்து 118 வரை, 123 லிருந்து 145 வரை, 147லிருந்து 152 வரை, 155, 156, 199-லிருந்து 203 வரை, 205, 206, 209, 294.
2	52 கத்தனேரி ..	76லிருந்து 125 வரை.
3	51 செல்லூர் ..	கிராமம் முழுவதும்

உண்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1975 ஏப்ரல் 18] *[திரு. அ. பெ. தர்மலிங்கம்]*

விவர அட்டவணை—தொடர்ச்சி

தொடர் எண் (1)		வருவாய் கிராமத்தின் எண்ணும் பெயரும் (2)	நில அளவை எண் (3)
	136	பீபிகுளம் ..	11 லிருந்து 39 வரை (மாநகராட்சி எல்லைகளில் தற்போது அமைந்துள்ள பகுதிகள் முழுவதும்)
5	50	தல்லாகுளம் ..	கிராமம் முழுவதும்
6	49	மானகிரி 1 துண்டு ..	1லிருந்து 26 வரை
7	39	சாத்தமங்கலம் ..	கிராமம் முழுவதும்
8	37	வில்லுபுரம் ..	2 லிருந்து 32 வரை
9	24	மாடக்குளம் கிராமம் ..	தற்போது மாநகராட்சி எல்லைகளுக்கு வெளியே அமைந்துள்ள வருவாய்க் கிராமம் முழுவதும்.
10	22	ஆராப்பாளையம் ..	கிராமம் முழுவதும்
11	23	பொன்மேனி ..	தற்போது மாநகராட்சி எல்லைக்கு வெளியே அமைந்துள்ள கிராமம் முழுவதும்
12	20	கொக்களப்பி ..	கிராமம் முழுவதும்
13	19	கோச்சடை ..	கிராமம் முழுவதும்

[விளக்கக் குறிப்பு முன்னரே அறிவிக்கப்பட்டது]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-09 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.

ȣ 79 – 8 -ம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.